TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051804

1. District : மாவட்டம் சிவகங்கை PS: காவல்நிலையம் V&AC, சிவகங்கை Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 06/2020 Date: நாள் 24-12-2020

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7 of PC Act 1988
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: [as amended in] Act
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 16 of 2018
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் 24-12-2020 Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 12.30 hrs Time to : நேரம் வரை 20.00 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24-12-2020 Time : நேரம் 22.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக - By written -

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 1 Km நகர் கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Office of the District Town and Country Planning, Sivagangai Dist.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G. [illegible] (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் துணை ஆய்வாளர் [illegible], சிவகங்கை (g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.**G.**நாகராஜன், **57/2020,** த/பெ.ஞானமுத்து, துணை இயக்குநர், சிவகங்கை மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், சிவகங்கை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

**No Delay**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்து சமர்பிக்கிறேன்:-** இன்று 24.12.2020 ஆம் தேதி இரவு 22.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது, சிவகங்கை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான திரு.G.செந்தில்வேலு அவர்கள் அலுவலகத்தில் ஆஜராகி, 24.12.2020 ஆம் தேதி, சிவகங்கை மாவட்டம், சிவகங்கை நகர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள, சிவகங்கை மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் நடந்திய இணை திடீர் சோதனை சம்பந்தமான செயல்முறை நடவடிக்கைகள், 24.12.2020 ஆம் தேதி பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.1,00,000/- மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்களுடன் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப்பெற்று, சிவகங்கை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.06/2020, U/s. 7 of Prevention of Corruption Act 1988 ( as amended in ) Act 16 of 2018-ன்படி வழக்கு பதிவு

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் M.இமானுவேல் பதவி காவல் ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

ஜி.செந்தில்வேலு
24/12/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
துணை ஆய்வுக்குழு அலுவலர் சிவகங்கை

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் D.சக்கிரான்
Rank: நிலை காவல் - ஆய்வாளர் ...No. எண் ..........
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
சிவகங்கை மாவட்டம்
24-12-2020

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

24-12-2020

செய்தேன். வாதி புகார் பின்வருமாறு:- அனுப்புனர்: G.செந்தில்வேலு, துணை ஆய்வுக்குழு அலுவலர், சிவகங்கை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை. நாள்.24.12.2020 ஐயா, பொருள்: இணை திடீர் சோதனை – சிவகங்கை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் 24.12.2020 அன்று திடீர் இணை சோதனை நடத்தப்பட்டது – மேல் நடவடிக்கை எடுக்க கோருவது தொடர்பாக. பார்வை: எனது செயல்முறை நடவடிக்கைகள், நாள்.24.12.2020. ********* இன்று 24.12.2020ம் தேதி சிவகங்கை மாவட்டம், துணை ஆயவுக்குழு அலுவலராக என்னை அழைத்தன் பேரில், நான் காலை 10.30 மணியளவில் தங்கள் அலுவலகம் வந்து தங்களை சந்தித்தேன். சிவகங்கை மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் கட்டிட வரைபட அனுமதி, மனைப்பிரிவு ஒப்புதல் மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவை வரன்முறைப்படுத்துதல் சம்மந்தமாக அந்த அலுவலகத்திற்கு வரும் விண்ணப்பதாரர்களிடமிருந்து, அதற்கான அனுமதி வழங்கும்போது லஞ்சமாக பணம் கேட்டு வாங்குவதாகவும், அதன்படி இன்றும் மனைப்பிரிவு ஒப்புதல் கோரும் விண்ணப்பதாரர்களிடமிருந்து லஞ்சம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலின் அடிப்படையில் சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் அமைத்துள்ள சிவகங்கை மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்திற்கு சென்று, நான் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.மு.சந்திரன் மற்றும் போலீஸ் பார்ட்டி ஆகியோருடன் மேற்படி அலுவலகத்தில் மதியம் 12.30 மணி முதல் இரவு 8 மணி வரை இணை திடீர் சோதனை மேற்கொண்டேன். மேற்படி சோதனையின்போது சிவகங்கை மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் துணை இயக்குநர் அறையில் துணை இயக்குநர் திரு.G.நாகராஜன், மேற்பார்வையாளர் /வரைவாளர் நிலை–2 திரு.சி.அண்ணாமலை மற்றும் 4 தனிநபர்கள் ஆஜரில் இருந்தார்கள். அந்த அலுவலகத்தில் துணை இயக்குநர் அவர்களின் தனி அறைக்குள் சென்ற போது துணை இயக்குநர் திரு.நாகராஜன், 57/2020, த/பெ. ஞானமுத்து, கதவு எண்.803, முத்துச்சாமிநகர், சிவகங்கை (நிரந்தர முகவரி:– 3/D, KGEYES SUSHAMA அபார்ட்மெண்ட், மகாராஜா நகர், திருநெல்வேலி மாநகர்) வடக்கு நோக்கி அவரது இருக்கையில் அமர்ந்திருந்தார். அவரை சோதனையிட அவர் அணிந்திருந்த சட்டையின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து அவரது அடையாள அட்டை மற்றும் ரூ.270/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். பணியாளர்கள் தினசரி இருப்புப்பதிவேட்டினை சரிபார்த்த போது அவர் செலவிற்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.270/– என குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்ட போது தான் செலவிற்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.270/– என்று தெரிவித்தார். ஆகவே, மேற்படி பணம் ரூ.270/–ஐ அவரிடமே திரும்ப

ஒப்படைக்கப்பட்டது. துணை இயக்குநர் இருக்கைக்கு முன்பிருந்த மேசையின் மேல் இருந்த கோப்புகளை சரி பார்க்கப்பட்டது. கோப்புகள் சம்மந்தமாக சந்தேகம் எழாத காரணத்தினால் அக்கோப்புகள் மற்றும் அடையாள அட்டை ஆகியவற்றை துணை இயக்குநர் திரு.நாகராஜன் அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது அலுவலகத்தினுள் துணை இயக்குநர் இருக்கைக்கு அருகே இடது புறம் நின்று கொண்டிருந்த தனியார் திரு.அயூப், த/பெ.முகமது மீரா, 17/B, காலனி ரோடு, புதுவயல், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் என்பவரை விசாரிக்க, அவர் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், புதுவயல் கிராமம் சர்வே எண்.121/23ல் அமைக்க உள்ள குடியிருப்பு மனைப் பிரிவிற்கு தொழில் நுட்ப அனுமதி வேண்டி 22.12.2020 அன்று சிவகங்கை மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் திரு.நாகராஜன் அவர்களிடம் விண்ணப்பித்ததாகவும், அப்போது துணை இயக்குநர் திரு.நாகராஜன் தன்னிடம் மனைப்பிரிவு தொழில் நுட்ப அனுமதி வழங்க ரூபாய் ஒரு லட்சம் கண்டிப்பாக தரவேண்டும் என்று கேட்டதன் பேரில், தான் இன்று துணை இயக்குநர் திரு.நாகராஜன் அவர்களை சந்தித்து எனது மனு தொடர்பாக கேட்டபோது அவர் ரூ.1,00,000/- கொண்டு வந்தீர்களா என்று கேட்டார். நானும் கொண்டு வந்திருக்கிறேன் என்று சொல்லி, நான் கொண்டு வந்திருந்த பணம் ரூ.1,00,000/- யை எடுத்து அவரிடம் கொடுப்பதற்குள் தாங்கள் உள்ளே வந்துவிட்டதாக தெரிவித்தார். பின்னர், அவர் உடுத்தி இருந்த வேட்டி சட்டையை சோதனை செய்த போது பனியனின் உள் பக்கம் இருந்து மூன்று கத்தைகளாக பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில், ஒரு கத்தையில் ரப்பர் பேண்டால் சுற்றப்பட்டு 25 இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகள் அடங்கிய ரூ.50,000/-ம், இரண்டாவது கத்தையில் ரப்பர் பேண்டால் சுற்றப்பட்டு 25 இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகள் அடங்கிய ரூ.50,000/-ம், 3வது கத்தையில் 42 ஐநூறு ரூபாய் நோட்டுகள், ஒரு 200 ரூபாய் நோட்டு, 5 நூறு ரூபாய் நோட்டுகள், 2 ஐம்பது ரூபாய் நோட்டுக்கள், 3 பத்து ரூபாய் நோட்டுகள் மொத்தம் ரூபாய் 21,830/-ம் ஆக மொத்தம் ரூ.1,21,830/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்ட போது ரூ.21,830/- தனது சொந்த செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் என்றும் ரூ.1,00,000/- துணை இயக்குநர் திரு.நாகராஜன் அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்றும் கூறினார். ஆகவே, அவர் செலவிற்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.21,830/-ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி துணை இயக்குநர் திரு.நாகராஜன் அவர்களுக்கு லஞ்சம் கொடுப்பதற்காக கொண்டு வரப்பட்ட பணம் ரூ.1,00,000/- அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின் போது அலுவலகத்தினுள் துணை இயக்குநர் இருக்கைக்கு முன்பு நின்றிருந்த திரு.சி.அழகு என்ற அழகேசன், த/பெ. சின்னசாமி, நல்லிவயல், வெங்களூர் போஸ்ட், தேவகோட்டை தாலுகா, சிவகங்கை மாவட்டம் என்பவரை விசாரிக்க பிளான்

அப்ரூவல் சம்மந்தமாக துணை இயக்குநர் அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்த போது ரூ.620/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது அவர் செலவிற்காக கொண்டு வந்திருந்த பணம் என்று தெரிவித்ததினால் மேற்படி பணம் ரூ.620/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. திடீர் சோதனையின் போது அலுவலகத்தினுள் துணை இயக்குநர் இருக்கைக்கு முன்பு நின்றிருந்த திரு.பின்னி ஆப்ரகாம், த/பெ.ஆப்ரகாம், கதவு எண். 89, 100 அடி ரோடு, காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் என்பவரை விசாரிக்க நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் பதிவு பெற்ற பொறியாளர் என்றும் மனைப்பிரிவு ஒப்புதல் தொடர்பான வரைபடங்கள் சம்மந்தமாக துணை இயக்குநர் திரு.நாகராஜன் அழைத்தன் பேரில் வந்ததாகத் தெரிவித்தார். அவரை சோதனை செய்த போது ரூ.4,300/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது அவர் செலவிற்காக கொண்டு வந்திருந்த பணம் என்று தெரிவித்ததினால் மேற்படி பணம் ரூ.4,300/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. திடீர் சோதனையின் போது அலுவலகத்தினுள் துணை இயக்குநர் இருக்கைக்கு முன்பு நின்றிருந்த திரு.C.அண்ணாமலை, த/பெ. சொக்கலிங்கம், 62/1, வ.உ.சி ரோடு, காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் என்பவரை விசாரிக்க நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் பதிவு பெற்ற பொறியாளர் என்றும் மனைப்பிரிவு ஒப்புதல் தொடர்பான வரைபடங்கள் சம்மந்தமாக துணை இயக்குநர் திரு.நாகராஜன் அழைத்தன் பேரில் வந்ததாகத் தெரிவித்தார். அவரை சோதனை செய்த போது அவரிடம் பணம் ஏதும் இல்லை என தெரிவித்தார். துணை இயக்குநர் அறையிலிருந்த மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை–2, திரு.சி.அண்ணாமலை என்பவரை சோதனையிட அவரது இடது பக்க சட்டைப்பாக்கெட்டில் ரூ.120/– இருந்தது. பணியாளர்கள் தினசரி இருப்புப்பதிவேட்டினை சரிபார்த்த போது அவர் செலவிற்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.220/– என குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்ட போது தான் செலவிற்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.220/–ல் டீ, வடை மற்றும் இதரச் செலவு ரூ.100/– போக மீதம் ரூ.120/– வைத்துள்ளதாக தெரிவித்தார். ஆகவே, மேற்படி பணம் ரூ.120/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்திலிருந்த திரு.வெ.ராமகிருஷ்ணன், அளவர்/உதவி வரைவாளர் என்பவரை சோதனையிட அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் ரூ. 290/– இருந்தது. பணியாளர்கள் தினசரி இருப்புப்பதிவேட்டினை சரிபார்த்த போது அவர் செலவிற்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.360/– என குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்ட போது தான் செலவிற்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.360/–ல் கொரியர் செலவு மற்றும் டீ செலவு மொத்தம் ரூ.70/– போக மீதம் ரூ.290/– வைத்துள்ளதாக தெரிவித்தார். ஆகவே, மேற்படி பணம் ரூ.290/– அவரிடமே திரும்ப

ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்திலிருந்த திரு.அ.மகாராஜன், உதவியாளர் என்பவரை சோதனையிட அவரது இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்த மணிபர்சில் ரூ.100/– இருந்தது. பணியாளர்கள் தினசரி இருப்புப்பதிவேட்டினை சரிபார்த்த போது அவர் செலவிற்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.100/– என குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்ட போது தான் செலவிற்காக கொண்டு வந்திருந்த பணம் என்று தெரிவித்தார். ஆகவே, மேற்படி பணம் ரூ.100/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்தில் பெண் பணியாளர்கள் பணிபுரிவதினால் அவர்களை சோதனை செய்வதற்காக திருமதி.B.அமுதா, தலைமைக்காவலர் 1022, அனைத்து மகளிர் காவல் நிலையம், சிவகங்கை மற்றும் திருமதி.A.பானுமதி, பெண் காவலர் 784, சிவகங்கை நகர் காவல் நிலையம் ஆகியோர் சிவகங்கை மாவட்ட காவல் அலுவலகம் மூலம் வரவழைக்கப்பட்டனர். அலுவலகத்திலிருந்த திருமதி.S.ஹேமமாலினி, தட்டச்சர் என்பவரை பெண் தலைமைக்காவலர் திருமதி.அமுதா மற்றும் பெண் காவலர் திருமதி. பானுமதி ஆகியோர் மூலம் சோதனையிட சிமிண்ட் கலர் ஹேண்ட் பேக்கில் ரூ. 290/– இருந்தது. பணியாளர்கள் தினசரி இருப்புப்பதிவேட்டினை சரிபார்த்த போது அவரது பணம் ரூ.290/– என குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்ட போது தான் செலவிற்காக கொண்டு வந்திருந்த பணம் என்று தெரிவித்தார். ஆகவே, மேற்படி பணம் ரூ.290/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்திலிருந்த திருமதி.வெ.ராணி, வரைவாளர் நிலை–3 என்பவரை பெண் தலைமைக்காவலர் திருமதி.அமுதா மற்றும் பெண் காவலர் திருமதி.பானுமதி ஆகியோர்கள் மூலம் சோதனையிட அவரது மஞ்சள் கலர் ஹேண்ட் பேக்கில் ரூ.150/– இருந்தது. பணியாளர்கள் தினசரி இருப்புப்பதிவேட்டினை சரிபார்த்த போது அவரது பணம் ரூ.150/– என குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்ட போது தான் செலவிற்காக கொண்டு வந்திருந்த பணம் என்று தெரிவித்தார். ஆகவே, மேற்படி பணம் ரூ.150/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்திலிருந்த திருமதி.ரா.சந்திரலேகா, அளவர்/உதவி வரைவாளர் என்பவரை பெண் தலைமைக்காவலர் திருமதி.அமுதா மற்றும் பெண் காவலர் திருமதி. பானுமதி ஆகியோர்கள் மூலம் சோதனையிட அவரது மணி பர்சில் ரூ.370/– இருந்தது. பணியாளர்கள் தினசரி இருப்புப்பதிவேட்டினை சரிபார்த்த போது அவரது பணம் ரூ.370/– என குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்ட போது தான் செலவிற்காக கொண்டு வந்திருந்த பணம் என்று தெரிவித்தார். ஆகவே, மேற்படி பணம் ரூ.370/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்திலிருந்த திருமதி.நா.சே.அபிதாஸ்ரீ, வரைவாளர் நிலை –1 என்பவரை பெண் தலைமைக்காவலர் திருமதி.அமுதா மற்றும் பெண் காவலர் திருமதி. பானுமதி

ஆகியோர்கள் மூலம் சோதனையிட அவரது மணி பர்சில் ரூ.223/– இருந்தது. பணியாளர்கள் தினசரி இருப்புப்பதிவேட்டினை சரிபார்த்த போது அவரது பணம் ரூ.230/– என குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்ட போது தான் செலவிற்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.230ல் ரூ.7யை செலவு செய்து விட்டதாகவும் மீதம் பணம் ரூ 223/– உள்ளதாகவும் தெரிவித்தார். ஆகவே, மேற்படி பணம் ரூ.223/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது அலுவலகத்தினுள் இருந்த தனியார் திருமதி. M. சாரதா, க/பெ.முருகானந்தம், வீட்டு எண்.1660, அண்ணாமலை நகர், வாணியங்குடி, சிவகங்கை மாவட்டம் என்பவரை விசாரிக்க, அவர் சிவகங்கை மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் துணை இயக்குநர் திரு.நாகராஜன் அவர்கள் சொன்னதன்பேரில் 17.11.2020ம் தேதி முதல் தற்காலிகமாக தட்டச்சராக பணிபுரிந்து வருவதாகவும் அதற்கு மாதச்சம்பளமாக ரூ.7,000/– கொடுப்பதாகவும், நவம்பர் மாதத்தில் பணிபுரிந்ததற்கு ரூபாய் 3,500/– சம்பளமாக கொடுத்தார்கள் எனத் தெரிவித்தார். அவரை பெண் தலைமைக்காவலர் திருமதி.அமுதா மற்றும் பெண் காவலர் திருமதி. பானுமதி ஆசியோர்கள் மூலம் சோதனையிட அவரது மணி பர்சில் ரூ.230/– இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்ட போது தான் செலவிற்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.230 என்று தெரிவித்தார். ஆகவே, மேற்படி பணம் ரூ.230/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், இன்று மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் உள்ள 1)பணியாளர் வருகைப்பதிவேடு (ஜீலை 2020 முதல் டிசம்பர் 2020 வரை), 2)பணியாளர் தினசரி இருப்பு பதிவேடு (15.12.2020 முதல் 24.12.2020 வரை), 3)சிவகங்கை மண்டலம் கட்டிட அனுமதி பதிவேடு–2020, 4) மனைப்பிரிவு தொழில்நுட்ப ஒப்புதல் பதிவேடு–2020, 5)அனுமதியற்ற மனைப்பிரிவு ஒப்புதல் பதிவேடு–2020, 6)திரு.மு.அயூப் என்பவரின் மனைப்பிரிவு ஒப்புதல் தொடர்பான கோப்பு எண்.1026/20/சிமா–2 ஆகியவற்றை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 1)துணை இயக்குநர் திரு.நாகராஜன், 2)மேற்பார்வையாளர் திரு.சி.அண்ணாமலை, 3)தட்டச்சர் திருமதி.S.ஹேமமாலினி, 4)வரைவாளர் நிலை–3 திருமதி.வெ.ராணி, 5)அளவர்/உதவி வரைவாளர் திரு.வெ.ராமகிருஷ்ணன், 6) உதவியாளர் அ.திரு.மகாராஜன், 7)அளவர்/உதவி வரைவாளர் திருமதி.ரா.சந்திரலேகா, 8) வரைவாளர் நிலை–1, திருமதி.நா.சே,அபிதாஸ்ரீ, தனியர்கள் 9)திருமதி. M.சாரதா, 10)திரு.அயூப், 11)திரு.சி.அழகு என்ற அழகேசன், 12)திரு.பின்னி ஆப்ரகாம் மற்றும் 13) திரு.C.அண்ணாமலை ஆகியோரை துணை ஆய்வுக்குழு அலுவலர்கள் விசாரித்து எழுத்துப்பூர்வமான வாக்குமூலங்கள் பெறப்பட்டன. இந்த திடீர் இணைச்சோதனையில் மொத்தம் ரூ.1,00,000/– கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் ஆய்வு அறிக்கை குறிப்புகள்

இன்று 24.12.2020ம் தேதி 20.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இணை திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,00,000/–, பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், இணை திடீர் சோதனை சம்பந்தமான எனது நடவடிக்கை குறிப்பு ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஒப்படைக்கிறேன். திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,00,000/– துணை இயக்குநர் திரு.நாகராஜன் குடியிருப்பு மனைப்புரிவிற்கு தொழில் நுட்ப அனுமதி வழங்குவதற்கு திரு.அயூப் என்பவரிடம் லஞ்சம் கேட்டதன்பேரில், துணை இயக்குநர் திரு.நாகராஜனுக்கு கொடுப்பதற்காக திரு.அயூப் கொண்டு வந்திருந்த பணம் என்று திடீர் சோதனையின்போது மேற்கொண்ட விசாரணையில் தெரிய வருவதால், சிவகங்கை மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் திரு.நாகராஜன் என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் **(G.செந்தில்வேலு)** துணை ஆய்வுக்குழு அலுவலர், சிவகங்கை மாவட்டம். 24.12.2020.

Submitted, Sir, Received this report along with enclosures and I registered a case in Sivagangai Vigilance and Anti-Corruption in Cr.No.06/2020, U/s 7 of Prevention of Corruption Act 1988 (as amended in) Act 16 of 2018 on 24.12.2020 at 22.30 hrs, sd. M.Chandran, Inspector of Police, Vigilance and Anti-Corruption, Sivagangai 24.12.2020.

The original F.I.R along with complaint enclosed with Joint Surprise Proceedings, Statements of 1)Tr.C.Annamalai, 2)Tr.S.Hemamozhilni, 3)Tmt.V.Rani, 4)Tr.Maharajan, 5)Tmt.R.Chandralega, 6)Tmt.N.S.Abithasri, 7)Tmt.M.Saratha, 8)Tr.Aiyub 9)Tr.C.Alagu @ Alagesan 10)Tr.Binni Abragam and 11)Tr.S.Annamalai are submitted to the Honourable Special Judge, Special Court for Trial of Cases under the Prevention of Corruption Act, Sivagangai and the copies are submitted to the concerned officers.

(M.CHANDRAN)
Inspector of Police
V&AC/Sivagangai Dist
24-12-2020.